**மாகாணக்கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**இரண்டாம் தவணைப் பரீட்சை- 2018**
**வணிகக்கல்வியும் கணக்கீடும் 1**

**தரம் 11** **நேரம்:- 1 மணித்தியாலம்**

**சுட்டெண்** ____ **பகுதி 1** **புள்ளி** ____

**கவனிக்க:-**
1. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக
2. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

❖ பின்வரும் சம்பவத்தை அவதானித்து 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. காயத்திரி என்பவர் "எழில் அழகுக்கலை நிலையம்" எனும் பெண்களுக்கான முக அலங்கரிப்பு தொடர்பான வணிகமொன்றை நடாத்துகின்றார். அத்துடன் 2017 ஆம் ஆண்டிற்கான சிறந்த அழகுக்கலை நிபுணர் என்ற விருதினையும் பெற்றுள்ளார். காயத்திரி வணிகத்தை மேற்கொள்வதற்கு தேவையான மூலப்பொருட்களை இயற்கையான மூலிகை தாவரங்களைக் கொண்டே தயாரித்து வருகின்றார்.

1) எழில் அழகுக்கலை நிலையத்தினால் திருப்தி செய்யப்படுவது?
   1. மனித தேவை    3. விருப்பம்
   2. உணவு    4. உடை

2) இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் "எழில் அழகுக்கலை நிலையம்" எந்த நிறுவன வகைக்கு உரித்தானது?
   1. தனியுடைமை    3. பங்குடைமை
   2. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி    4. கூட்டுறவு

3) எழில் அழகுக்கலை நிலையத்தினால் மூலப்பொருட்களாக பயன்படுத்தப்படும் இயற்கை மூலிகைத் தாவரம் எந்த உற்பத்திக் காரணிக்கு உரித்தாகும்?
   1. நிலம்    3. உழைப்பு
   2. மூலதனம்    4. முயற்சியாண்மை

4) இச் சம்பவத்தில் குறிப்பிடப்படும் எழில் அழகுக்கலை நிலையம் தொடர்பாக பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
   1. இவ்வணிகத்தை 1918ம் ஆண்டு 6 ஆம் இலக்க வியாபார பெயர்ப்பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும்.
   2. இவ்வணிகம் சட்டக்கட்டுப்பாடு குறைந்த வணிக அமைப்பாகும்.
   3. இவ் வணிகத்தின் நட்டப்பொறுப்பானது வரையறுக்கப்பட்டிருக்கும்
   4. இவ் வணிகம் சட்டத்தின் முன் தனி மனித அந்தஸ்த்து (சட்ட ஆளுமை) இல்லாத அமைப்பாகும்.

5) காயத்ரி அழகுக்கலை தொடர்பாக மேற்படிப்பை பூர்த்தி செய்வதானது அவரது வணிகத்திற்கு
   1. ஒரு பலமாகும்    3. ஒரு பலவீனமாகும்
   2. ஒரு வாய்ப்பாகும்    4. ஓர் அச்சுறுத்தலாகும்

6) தரமான உற்பத்திப் பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளல் என்ற நோக்கத்தை கொண்ட அக்கறை கொள்ளும் தரப்பினர்..................ஆவார்.
   1. உரிமையாளர்    3. ஊழியர்கள்
   2. வாடிக்கையாளர்    4 வழங்குநர்

7) பின்வருவன வணிகப் புறச் சூழலொன்றில் இடம்பெற்ற நிகழ்வுகள் ஆகும்.

A நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் காரணமாக அரசியல் நிலைமையில் ஸ்தீரணமற்ற நிலை தோன்றுதல்.

B பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை GPS ( Global Positioning System) அறிமுகம்

C இலங்கை மக்களின் தலா தேசிய வருமானம் அதிகரித்துச் செல்லும் போக்குக் காணப்படல்.

மேலே தரப்பட்ட நிகழ்வுகளுக்கு பொருத்தமான புறச்சூழல் காரணிகளை சரியான ஒழுங்குவரிசையில் எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1. அரசியல் சூழல், பூகோளமயச் சூழல், பொருளாதாரச் சூழல்
2. அரசியல் சூழல், தொழினுட்பச் சூழல், பொருளாதாரச் சூழல்
3. பூகோளமயச் சூழல், பொருளாதாரச் சூழல், அரசியல் சூழல்
4. தொழினுட்பச்சூழல், பூகோளமயச் சூழல், அரசியல் சூழல்

8) வணிகமொன்றின் ஊழியர், முகாமையாளர் என்போர்………………….. சூழல் காரணிக்குள் அடங்குவதோடு வாடிக்கையாளர், போட்டியாளர் என்போர்……………………. சூழல் காரணிக்குள் அடங்குகின்றனர்.

1. சமூக கலாசார சூழல், மக்கட் சூழல்
2. மக்கட் சூழல், பொருளாதாரச் சூழல்
3. புறச் சூழல், அகச் சூழல்
4. அகச் சூழல், புறச் சூழல்

9) நட்டப் பொறுப்பு வரையறுக்கப்பட்டதும், சட்ட ஆளுமை உடையதுமான வணிக அமைப்புச் சோடியினைத் தெரிவு செய்க.

1. அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனம்
2. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி, அரச திணைக்களம்
3. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி, கூட்டுறவு
4. தனியாள் வணிகம், பங்குடைமை வணிகம்

10) பின்வருவனவற்றுள் சில்லறை வியாபார நடவடிக்கை எது?

1. ஹரிஷ் என்ற ஒப்பந்தகாரருக்கு கட்டிட நிர்மாணங்களுக்கு தேவையான சீமெந்து பக்கற்றுக்களை விற்பனை செய்தல்.
2. சந்திரன் விவசாயிடம் தானியங்களை கொள்வனவு செய்து பலசரக்கு வியாபார நிலையங்களுக்கு விற்பனை செய்தல்.
3. ஆடைத் தொழிற்சாலையில் இருந்து ஆடைகளை கொள்வனவு செய்து ஆடை விற்பனையகங்களுக்கு விற்பனை செய்தல்.
4. பாடசாலைச் சிற்றுண்டிச்சாலையில் மாணவர்களுக்கு தேவையான சிற்றுண்டிகளை விற்பனை செய்தல்.

11) வங்கிகளில் பேணப்படும் நிலையான வைப்புக் கணக்கு/ கால வைப்பு தொடர்பாக பிழையான கூற்றினைத் தெரிவு செய்க.

1. வரவு அட்டைகள் மூலம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியும்.
2. நிலையான வைப்புக்காக கிடைக்கும் வட்டிவீதம் வைப்புக் காலத்திற்கமைய வேறுபடும்.
3. நிலையான வைப்புச் சான்றிதழை பிணையாக வைத்து வங்கியிலிருந்து குறிப்பிட்ட வீதத்தினை கடனாக பெற முடியும்.
4. நிலையான வைப்பினை பேணுபவர்களுக்கு வைப்புச் சான்றிதழ் வழங்கப்படும்.

12) நிரல் X ஆனது பணக்கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்தும் சாதனங்களையும், Y நிரலானது அச் சாதனங்கள் மூலம் பெறப்படும் சேவைகளையும் குறித்து நிற்கின்றது.

| X | Y |
|---|---|
| 1. கடனட்டை | A. நடைமுறைக் கணக்கை பேணுபவர்கள் பயன்படுத்துவது |
| 2. வரவட்டை | B. வணிக வங்கியில் கடன் அடிப்படையில் வழங்கப்படுவது |
| 3. தன்னியக்க ரெலர் அட்டை | C. வங்கிக் கணக்கில் காணப்படும் பணத்தினை அடிப்படையாகக் கொண்டது |
| 4. காசோலை | D. சேமிப்புக் கணக்கிலிருந்து வாடிக்கையாளர் பெற்றுக் கொள்ளும் சேவை |

சரியான முறையில் நிரல் X இனையும், நிரல் Y இணைக்கும் போது காணப்படும் சரியான விடை

1. D, B, C, A  3. B, A, C, D
2. C, A, B, D  4. B, C, D, A

13) ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி செய்யப்பட்ட செந்தூரனின் மோட்டார் வாகனமானது அவரின் வாகன ஓட்டுநரான கரன் வாகனத்தை செலுத்திய வேளையில் விபத்துக்குள்ளானதில் ஆதவன் என்பவர் காயமடைந்தார்.

இச் சம்பவத்தில் குறிப்பிடப்படும் காப்புறுதி தொடர்பில் முதலாம் கட்சியினர், இரண்டாம் கட்சியினரை முறையே எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1. செந்தூரன், ஜனசக்தி காப்புறுதி நிறுவனம்
2. ஜனசக்தி காப்புறுதி நிறுவனம், செந்தூரன்
3. ஜனசக்தி காப்புறுதி நிறுவனம், ஆதவன்
4. செந்தூரன், ஆதவன்

14) கீழ்வரும் வரை படமானது தொடர்பாடல் செயன்முறையினை எடுத்துக் காட்டுகின்றது.

அனுப்புபவர் ⟶ செய்தி ⟶ .........1.............. ⟶ பெறுபவர்

↑ மீள வலியுறுத்தல் ⟵ ......2............... ⟵ (பெறுபவர்)

1, 2 ஆகிய இலக்கங்களினால் குறிக்கப்படுவது

1. துலங்கல், ஊடகம்  3. பின்னூட்டல், ஊடகம்
2. ஊடகம், துலங்கல்  4. ஊடகம் ,பின்னூட்டல்

15) கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு இந்தியாவில் இருந்து அழகிய ரோஜாப் பூக்கள் ஸ்ரீ லங்கா ஏயார் லைன்ஸ் விமானத்தின் மூலம் கொண்டுவரப்பட்டது. இவ் விடயத்தில் குறிக்கப்படும் போக்குவரத்தின் மூலக்கூறுகள்

1. ஊடகம் ,தரிப்பிடம்  3. தரிப்பிடம், ஊடகம்
2. தரிப்பிடம், வலு  4. வழி, ஊடகம்

16) கணக்கீட்டின் பிரதான நோக்கமாகக் கருதப்படக்கூடியது,

1. வணிகத்தின் நிதி நிலைமையை அறிவதற்கு
2. சட்டத் தேவைப்பாடுகளை நிறைவேற்றல்
3. அக்கறை கொண்ட தரப்பினருக்கு தேவையான பல்வேறு தகவல்களை வழங்க
4. இலாபத்தை சரியாகக் கணக்கிடுவதற்கு

17) கொடுக்கல் வாங்கல்களின் பெறுபேறாக தோற்றம் பெறுகின்ற கணக்கீட்டுக் கூறுகளாக கருதப்படக் கூடியது

1. சொத்துக்கள், பொறுப்புக்கள்  3. வருமானங்கள், செலவினங்கள்
2. உரிமையாண்மை  4. மேற்கூறிய யாவும்

❖ வினா இல 18, 19, 20 இற்கு கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்க.
கரன் வணிகத்தில் காணப்படும் சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான விபரம் வருமாறு:-

A. இயந்திரம்  D. நீண்டகால வங்கிக்கடன்
B. கடன்பட்டோர்  E. காசு மீதி
C. கணினி  F. வங்கி மேலதிகப்பற்று

18) நடைமுறைச் சொத்தாகக் கருதப்படக் கூடியது,

1. A, B  2. B, F  3. B, E  4. A, F

19) நடைமுறையல்லாச் சொத்தாகக் கருதப்படக் கூடியது

1. A, C  2. D, F  3. B, E  4. A, F

20) F என்னும் எழுத்தினால் குறிக்கப்படுவது
1. நடைமுறைச் சொத்து
2. நடைமுறையல்லாப் பொறுப்பு
3. நடைமுறையல்லாச் சொத்து
4. நடைமுறைப் பொறுப்பு

21) உரிமையாளர் மேலதிக மூலதனத்தை இடும் போது கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம்
1. சொத்துக்கள் அதிகரிக்கும், உரிமை அதிகரிக்கும்
2. சொத்துக்கள் அதிகரிகக்கும், காசு அதிகரிக்கும்
3. பொறுப்புக்கள் அதிகரிக்கும், உரிமை அதிகரிக்கும்
4. உரிமை அதிகரிக்கும், சொத்துக்கள் குறைவடையும்

22) வணிகமொன்றின் பேரேட்டில் கடன்பட்டோர் கணக்கானது ………………… கணக்காக காணப்படும் அதேவேளை சம்பளக் கணக்கானது …………………………… கணக்காகக் காணப்படும்.
மேலே தரப்பட்ட கூற்றில் 1, 2 ஆகிய இடைவெளிகளில் இடம்பெறக் கூடிய சரியான சொற்களை ஒழுங்குமுறையில் எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
1. வருமானம், உரிமையாண்மை
2. சொத்து, செலவீனம்
3. வருமானம், செலவீனம்
4. பொறுப்பு, உரிமையாண்மை

23) கீழே A நிரலில் மூல ஏடுகள் தரப்பட்டுள்ளன. நிரல் B யில் கொடுக்கல் வாங்கலின் மூல ஆவணங்கள் தரப்பட்டுள்ளன.

| **மூல ஏடுகள்** A | **மூல ஆவணங்கள்** B` |
|---|---|
| 1. காசேடு | A. வைப்புச் சீட்டு |
| 2. வங்கிக் கணக்கு | B. நாட்குறிப்பு கைச்சாத்து |
| 3. சில்லறைக் காசேடு | C. காசேட்டு கைச்சாத்து |
| 4. பொது நாட்குறிப்பேடு | D. பற்றுச் சீட்டு |

A நிரலுக்கு பொருத்தமானதை B நிரலில் இருந்து தெரிவு செய்யும் போது அமையும் சரியான விடையினைத் தெரிவு செய்க.
1. D, A, B, C
2. D, A, C, B
3. A, C, B, D
4. D, B, A, C

24) வணிகங்களின் பொருட்களின் பட்டியல் விலையிலிருந்து யாதேனுமொரு தொகையைக் குறைத்து விற்பனை செய்யும்போது வழங்கப்படும் கழிவு எவ்வாறு அழைக்கப்படும்?
1. கொடுத்த கழிவு 2. பெற்றகழிவு 3. காசுக் கழிவு 4. வியாபாரக் கழிவு

25) இந்திரா வணிகத்தின் சில்லறைக் காசேட்டுக் கட்டுநிதியின் பெறுமதி ரூ 1000 ஆகும். 31.01.2017 இல் இருந்தவாறு சில்லறைக் காசாளரிடம் மீதியாக எஞ்சியிருந்த தொகை ரூ 200 ஆகும். 01.02.2017 இல் இருந்து வணிகத்துக்கான சில்லறைக் காசேட்டு கட்டுநிதியை ரூ 2000 ஆக அதிகரிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டதெனின் 01.02.2017 இல் சில்லறைக் காசேட்டுக் கட்டுநிதியை மீள நிரப்புவதனை பதிவு செய்வதற்கான சரியான இரட்டைப் பதிவு

1) காசேடு வரவு ரூ 900
   சில்லறைக் காசேடு செலவு ரூ 900
2) சில்லறைக் காசேடு வரவு ரூ 1800
   காசேடு செலவு ரூ 1800
3) சில்லறைக் காசேடு வரவு ரூ 800
   காசேடு செலவு ரூ 800
4) காசேடு வரவு ரூ 1800
   சில்லறைக் காசேடு செலவு ரூ 1800

26) வணிகமொன்றின் ஊழியர்களுக்கு காசோலை மூலம் சம்பளக் கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டதனை பதிவு செய்வதற்கு பொருத்தமான மூலப் பதிவேடு

1. காசுக் கணக்கு
2. கொடுப்பனவு உறுதிச் சீட்டு
3. வங்கிக் கணக்கு
4. பொது நாட்குறிப்பு

27) பின்வருவன காகிதாதிப் பொருட்களை விற்பனை செய்யும் வணிகமொன்றின் முதன்மை ஏடுகளில் பதிவு செய்யப்பட்டிருந்த இரண்டு கொடுக்கல் வாங்கல்கள் ஆகும்.

A. தம்ரோ தளபாட வியாபாரிகளிடமிருந்து ரூ 50000 பெறுமதியான தளபாடங்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டமை
B. குமரன் என்பவர்க்கு கடனுக்கு விற்ற காகிதாதிகள் ரூ 30 000

மேலே தரப்பட்ட A மற்றும் B கொடுக்கல் வாங்கல்களை முதன்மை ஏடுகளில் பதிவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட மூல ஆவணங்களை ஒழுங்கு முறையில் எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1. நாட்குறிப்பு உறுதிச் சீட்டு, விற்பனைப் பட்டியல்
2. கொள்வனவுப் பட்டியல், விற்பனைப் பட்டியல்
3. கொள்வனவுப் பட்டியல் ,கொடுப்பனவு உறுதிச் சீட்டு
4. நாட்குறிப்பு உறுதிச் சீட்டு, கொள்வனவுப் பட்டியல்

28) வங்கிக் கூற்றின் வரவுப் பக்கத்தில் காணப்படும் ஒரு உருப்படி

1. கடன்பட்டோர் பணம் அனுப்புதல்கள்
2. காசு வைப்புக்கள்
3. காசோலை வைப்புக்கள்
4. வங்கி அறவீடுகள்

29) காசேட்டின்படி வங்கி மீதி ரூ 9000 வங்கிக் கூற்றின்படி மீதி ரூ 6000 வேறுபாட்டைத் தோற்றுவித்த காசோலை

1. மாற்றப்படாத காசோலை
2. வசூலிக்கப்படாத காசோலை
3. நேரடி வைப்புச் செய்த காசோலை
4. மறுக்கப்பட்ட காசோலை

30) ஒரு பரீட்சை மீதியானது சமப்படும் போது எடுக்கப்படக் கூடிய தீர்மானமாக அமைவது

1. அனைத்து இரட்டைப் பதிவுகளும் சரியாக உள்ளது
2. எண்கணித ரீதியாக இரட்டைப்பதிவு சரியாக உள்ளது.
3. முடிவுக் கணக்குகளை தயாரிக்க முடியும் என்பதை
4. முடிவுக் கணக்குகளை தயாரிக்க முடியாது என்பதை

31) பவித்திரா வணிகத்தில் ரூ 50000 கொள்வனவுப் பட்டியல் காணாமல் போயுள்ளது. இப்பிழையை சீர் செய்வதற்கான சரியான இரட்டைப் பதிவு

1. கொள்வனவுக் கணக்கு வரவு ரூ 50000, விற்பனை கணக்கு செலவு ரூ 50000
2. கொள்வனவுக் கணக்கு வரவு ரூ 50000, கடன்பட்டோர் கணக்கு செலவு ரூ 50000
3. கொள்வனவுக் கணக்கு வரவு ரூ 50000, கடன் கொடுத்தோர் கணக்கு ரூ 50000
4. கடன்பட்டோர் கணக்கு வரவு ரூ 50000, கொள்வனவு கணக்கு செலவு ரூ 50000

32) கீழ் வரும் கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1. பரீட்சை மீதி வரவு பக்கத்தில் ரூ 5000 ஆல் குறைவடைவதால் தொங்கல் கணக்கில் ரூ 5000 செலவு வைக்கப்படும்
2. பரீட்சை மீதி கணக்கீட்டு செயற்பாட்டில் உண்மையைக் காட்டும்
3. சகல கணக்கீட்டு பிழைகளும் சீர் செய்வதற்கு தொங்கட் கணக்கு அவசியம்
4. சகல பிழைகளும் திருத்தப்பட்ட பின்னர் தொங்கட் கணக்கு இல்லாமல் போகும்.

33) விற்பனை வருமானம், விற்பனைக் கிரயத்திலும் குறைவாக இருப்பின் அக்குறைந்த பெறுமானம் ............................ ஆகும்.

1. மொத்த நட்டம்
2. மொத்த இலாபம்
3. தேறிய இலாபம்
4. தேறிய நட்டம்

34) விநியோகச் செலவுகளை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.

1. கட்டிட வாடகை, காப்புறுதிக் கட்டணம், விளம்பரம், கொடுத்தகழிவு
2. வங்கிக்கடன் வட்டி, அறவிடமுடியாக்கடன், மின்சாரக் கட்டணம், சம்பளம்
3. விளம்பரச் செலவு, கொடுத்தகழிவு, அறவிடமுடியாக் கடன், விற்பனைத்தரகு
4. வங்கிக்கட்டணம், சம்பளம், கட்டிடத்தேய்வு, கொடுத்தகழிவு

❖ **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 35 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| 01.01.2017 இல் இருப்புக்கள் | 20000 | |
| விற்பனை | | 160000 |
| உட்சுமைகூலி | 2000 | |
| ஏற்றும் கூலி | 1000 | |
| காணிகட்டிடம் கிரயத்தில் | 100000 | |
| காணிகட்டிடம் பெறுமானத்தேய்வு ஏற்பாடு 01.01.2017 இல் | | 5000 |
| 10% வங்கிக் கடன் | | 25000 |
| கடன்பட்டோர் | 15000 | |
| கடன்கொடுத்தோர் | | 5000 |
| வங்கி மேலதிகப் பற்று | | 2000 |
| சம்பளம் | 6000 | |
| மின்சாரம் | 5000 | |
| இறைகள் | 4000 | |
| கொடுத்தகழிவு | 1750 | |
| பெற்றகழிவு | | 3000 |
| வங்கிக்கடன் வட்டி | 1250 | |
| காசு | 5000 | |
| மூலதனம் | | 41000 |
| கொள்வனவு | 80000 | |
| | 241000 | 241000 |

**மேலதிக தகவல்கள்:-**

❖ காணிகட்டிடங்களுக்கு நேர் கோட்டு முறையில் ஆண்டுக்கு 5% பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படல் வேண்டும்.

❖ 31.12.2017 இல் உள்ளவாறான இருப்புக்கள் ரூ 7000

❖ கடன்பட்டோரில் 2% அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்படல்வேண்டும்.

35) 2017 ஆம் ஆண்டிற்கான விற்பனைக் கிரயம் எவ்வளவு?

1. ரூ 64000
2. ரூ 96000
3. ரூ 98000
4. ரூ 103000

36) 31.12.2017 ஆம் ஆண்டுக்கான மொத்த இலாபம் எவ்வளவு?

1. ரூ 60000
2. ரூ 64000
3. ரூ 67000
4. ரூ 103000

37) 31.12.2017 இல் அட்டுறு வங்கிக்கடன் வட்டி எவ்வளவு?

1. ரூ 1250
2. ரூ 2250
3. ரூ 2500
4. ரூ 3750

38) 31.12.2017 இல் காணிகட்டிட பெறுமானத் தேய்வு ஏற்பாட்டு மீதியும், காணிகட்டிடத்தின் தேறிய பெறுமதியும் முறையே

1. ரூ 10000, ரூ 110000
2. ரூ 5000, ரூ 105000
3. ரூ 5000, ரூ 10000
4. ரூ 10000, ரூ 90000

39) 31.12.2017 இல் உள்ளவாறான மொத்தப் பொறுப்புக்களும், மொத்தச் சொத்துக்களும் முறையே

1. ரூ 27250, ரூ 111700
2. ரூ 33250, ரூ 116700
3. ரூ 32250, ரூ 116700
4. ரூ 33250, ரூ 116400

40. 31.12.2017 இல் உள்ளவாறான உரிமைத்தொகை எவ்வளவு?

1. ரூ 93450
2. ரூ 83450
3. ரூ 88450
4. ரூ 88150

The National e-learning Portal for The General Education

**மாகாணக்கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**இரண்டாம் தவணைப் பரீட்சை- 2018**
**வணிகக்கல்வியும் கணக்கீடும் 11**

**தரம் 11** **பகுதி11** **நேரம்:- 2 மணித்தியாலம்**

**சுட்டெண்:-…………………………….** **புள்ளி**

**அறிவுறுத்தல்:-**
**முதலாம் வினா உட்பட, பகுதி 1 இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 11 இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக**

**வினா இல 01**

**பின்வரும் சம்பவத்தை பயன்படுத்தி 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

ஹரி க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேற்றிற்காக காத்திருக்கும் வேளையில் தனது ஓய்வு நேரங்களில் மரவேலை செய்வோரிடம் கிடைக்கும் மரப்பலகைகளையும் சிறிய கம்பிகளையும் பயன்படுத்தி அலங்கார வேலைப்பாடு கொண்ட செல்லப்பிராணிகளை வளர்க்கும் அழகிய கூடுகளை அமைப்பதில் ஈடுபட்டு வந்தான். அவனின் நண்பன் ஆதவன் சிறுவயதிலிருந்தே செல்லப் பிராணிகளை வளர்ப்பதில் விருப்பம் இருந்தமையினால் அதில் அதிக கவனம் செலுத்தி வந்தான். இருவரும் சேர்ந்து உரையாடும்போது, இருவரும் இணைந்து செல்லப்பிராணிகளை வளர்த்து கூடுகளில் அடைத்து விற்பனை செய்யும் வணிகமொன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டனர். அவர்கள் வாழும் சூழலும் ஓரளவு வசதி படைத்த மக்களைக் கொண்டு காணப்பட்டமையால் அவர்களுக்கான சந்தையும் ஓரளவு கேள்வி கொண்டதாகவே காணப்பட்டது.

இதற்கமைய இருவரும் தமது பெற்றோரின் உதவியுடன் தலா ரூ 50000 மூலதனமிட்டு 01.01.2017 இல் வணிகத்தை 'ஸ்ரார் செல்லப் பிராணிகள் விற்பனை நிலையம்'(Star pets sales centre) என்ற பெயரில் ஆரம்பித்தனர். இதே திகதியில் வங்கிக் கடனாக ரூ 60000 வினை 10% வருடாந்த வட்டியில் பெற்றனர். தமது கொடுக்கல் வாங்கல்களை இலகுவாக பாதுகாப்புடன் மேற்கொள்வதற்காக மக்கள் வங்கிக் கிளை ஒன்றில் நடைமுறைக் கணக்கொன்றினை ஆரம்பிக்கவும் எண்ணியிருந்தனர்.

2017 ஜனவரியில் இடம்பெற்ற நடவடிக்கைகள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ➢ கூடுகள் அமைக்கத் தேவையான மரப்பலகைகள், கம்பிகள் கொள்வனவு | ரூ | 30000 |
| ➢ கூடுகள் அமைக்கத் தேவையான இயந்திர உபகரணங்கள் கொள்வனவு | ரூ | 50000 |
| ➢ செல்லப் பிராணிகளுக்குத் தேவையான உணவு கொள்வனவு | ரூ | 20000 |
| ➢ கட்டிட வாடகை | ரூ | 3000 |
| ➢ மின்சாரக் கட்டணம் | ரூ | 5000 |
| ➢ விளம்பரப்படுத்தல், காட்சிப்படுத்தல் செலவு | ரூ | 6000 |
| ➢ காசுக்கு விற்பனை | ரூ | 100000 |
| ➢ வங்கியில் நடைமுறைக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டது | ரூ | 20000 |

- ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கடன் வட்டி செலுத்தப்பட்டுள்ளது.
- இயந்திர உபகரணங்களுக்கு வருடாந்தம் நேர்கோட்டு முயைில் 12% பெறுமானத் தேய்விடப்படுகின்றது.
- 31.01.2017 இல் எதுவித இருப்பும் காணப்படவில்லை.

1. அ) ஸ்ரார் செல்லப்பிராணி விற்பனையகம் எவ்வகை வணிக அமைப்பிற்குள் உள்ளடங்குகின்றது. அதன் வாய்ப்புக்கள் ஒன்றினைக் குறிப்பிடுக.
   ஆ) மேற்படி வணிகத்தின் பதிவு தொடர்பாக உமது கருத்து யாது?
2. அ) வங்கியில் நடைமுறைக் கணக்கை பேணுவதள் மூலம் கிடைக்கும் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   ஆ) மேற்படி வணிகம் தமது கொடுக்கல் வயங்கல்களை மேற்கொள்ள காசோலை வரையும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. அ) ஸ்ரார் செல்லப்பிராணிகள் விற்பனையகத்தின் அனுகூலம் ஒன்றையும், பிரதிகூலம் ஒன்றையும் குறிப்பிடுக.
   ஆ) மேற்படி வணிகத்தை எதிர்காலத்தில் எத்தகைய தனியார்துறை வணிக அமைப்பாக ஆரம்பிக்க முடியும்?
4. அ) ஸ்ரார் வணிகம் தமது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும்போது சந்தைப்படுத்தல் கலவை மாறி தொடர்பாக கவனம் செலுத்துகின்றது. அத்தகைய கலவை மாறி ஒன்றினைக் குறிப்பிடுக.
   ஆ) மேற்படி வணிகத்தின் தேவைக்காக உதவியாளர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்டமை உரித்தாகும் முகாமைத்துவக் கருமம் யாது?
5. அ) 01.01.2017 இல் கணக்கீட்டுச் சமன்பாட்டை தொகையுடன் குறிப்பிடுக.
   ஆ) வங்கிக் கடன் பெற்றமைக்கான இரட்டைப்பதிவினைத் தருக.
6. ஜனவரி மாதத்திற்கான வங்கிக்கடன் வட்டியினையும், இயந்திர உபகரணங்களுக்கான பெறுமானத் தேய்வினையும் கணிப்படுக.
7. அ) மேற்படி வணிகத்தில் காணப்படும் நடைமுறையல்லா சொத்து ஒன்றினைக் குறிப்பிடுக.
   ஆ) வங்கியில் பணத்தினை இட்டு நடைமுறைக் கணக்கினை ஆரம்பிப்பதற்குரிய இரட்டைப்பதிவினைத் தருக.
8. 31.01.2017 காசு மீதியினைக் கணிப்பிடுக.
9. ஜனவரி மாதத்திற்கான தேறிய இலாபம் எவ்வளவு?
10. ஸ்ரார் வணிகத்தில் காணப்படக் கூடிய வநியோகச் செலவு, நிர்வாகச் செலவு, நிதிச் செலவு என்பவற்றிற்கு உதாரணம் தருக. (2×10=20 புள்ளிகள்)

---

## பகுதி 1- வணிகக்கல்வி

### (இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக)

**வினா இல 02**

1. அ) மனித தேவைகளையும் விருப்பங்களையும் வேறுபடுத்துக.
   ஆ) சேவை வணிகங்களுக்கு இரண்டு உதாரணம் தருக. (02 புள்ளிகள்)
2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையானதா பொய்யானதா எனக் குறிப்பிடுக.
   a) வணிகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு தேவையான வளங்கள் உற்பத்திக் காரணிகள் எனப்படும்.
   b) முகாமைத்துவச் செயற்பாடுகளின் வெற்றி,முகாமைத் தீர்மானங்களை செயற்படுத்தல் தொடர்பாக அக்கறை கொள்ளும் தரப்பினர் உரிமையாளர் ஆவார்.
   c) சர்வதேச ரீதியில் பிரசித்தமடைந்த நிறுவனங்களின் உற்பத்திகள் உள்நாட்டு சந்தைக்கு வருவதனால் உள்நாட்டில் காணப்படும் உற்பத்தி நிறுவனங்கள் நெருக்கடிக்கு உள்ளாதல் என்பது பொருளாதாரச் சூழலில் தாக்கத்தை ஏற்படுத்தும்.
   d) தொடர்ந்தியங்கும் நிலைப்புத் தன்மையும், சட்டரீதியான தனி மனித அந்தஸ்த்து கொண்டதுமான தனியார் துறை வணிக அமைப்பு கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் ஆகும்.
   (02 புள்ளிகள்)
3. புதிய பஸ் பேரூந்து தரிப்பிடத்திற்கு அண்மையில் இயற்கையான உணவுகளை இரசாயன நஞ்சற்ற முறையில் தயாரிக்கும் உணவகம் ஒன்று காணப்படுகின்றமையால் அவ் உணவகத்துக்கு பெருந்தொகையான வாடிக்கையாளர் வருகை தருகின்றனர்.
   அ) இந்த வணிகத்தின் வாய்ப்பொன்றைக் குறிப்பிடுக.
   ஆ) எதிர்காலத்தில் இவ் வணிகத்திற்கு ஏற்படக் கூடிய சவாலொன்றைக் குறிப்பிடுக.(02 புள்ளிகள்)

4. தனியாள் வணிகமொன்றைக் பதிவு செய்வதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைக் குறிப்பிடுக.
(02 புள்ளிகள்)
(மொத்தம் 08 புள்ளிகள்)

## வினா இல 03

1. அ) அரச திணைக்களங்களின் பிரதிகூலங்கள் இரண்டு தருக.
ஆ) அரச கூட்டுத்தாபனங்களுக்கு இரண்டு உதாரணம் தருக. (02 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையானதா பொய்யானதா எனக் குறிப்பிடுக.
   a) வணிக அமைப்புக்களை நோக்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்தும் போது தனியார் துறை வணிகம், பொதுத்துறை வணிகம் என வகைப்படுத்த முடியும்.
   b) பாடசாலைச் சிற்றுண்டிச்சாலையில் மாணவர்களுக்குத் தேவையான சிற்றுண்டிகளை விற்பனை செய்வதற்கு தேவையான உணவுப் பொருட்களை கொள்வனவு செய்தலானது சில்லறை வியாபாரம் எனப்படும்.
   c) மோட்டார் வாகனமொன்று ரூ 2500000 க்கு காப்புறுதி செய்யப்பட்ட போது ரூ1000000 நட்டம் ஏற்படுமாயின் இழப்பீட்டுத் தொகையான ரூ 1000000 மட்டுமே பெற முடியும்.
   d) பிரயாணம் முடியும் வரையில் பயன்படுத்தக் கூடிய போக்குவரத்து முறை தெருப் போக்குவரத்து முறை எனப்படும். (02 புள்ளிகள்)

3. அ) வியாபாரம் என்றால் என்ன?
ஆ) மொத்த வியாபாரத்தின் பண்புகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

4. அ) திட்டமிடல் என்பதனால் கருதப்படுவது யாது
ஆ) சந்தைப்படுத்தல் கலவைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(மொத்தம் 08 புள்ளிகள்)

## வினா இல 04

1. அ) பொதுவாக வணிக வங்கிகளில் ஆரம்பிக்கப்படும் கணக்குகளின் வகைகளைக் குறிப்பிடுக.
ஆ) காசோலை ஒன்றுடன் தொடர்புபடும் பிரிவினர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையானதா பொய்யானதா எனக் குறிப்பிடுக.
   a) வணிக வங்கிகளில் நிலையியல் கட்டளை வசதி கொண்ட கணக்கு வகையாக சேமிப்பு வைப்பு காணப்படுகின்றது.
   b) அமைப்பொன்றின் நோக்கங்களை மையமாகக் கொண்டு அதனை அடைந்து கொள்ளும் வகையில் அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் ஒப்படைக்கும் செயன்முறை ஒழுங்கமைத்தல் எனப்படும்.
   c) பாடசாலை ஒன்றில் கற்றல்-கற்பித்தல் செயன்முறைகள் உரியவாறு இடம்பெற்றுள்ளதா? என்பதை பரீட்சைப் பெறுபேறுகளின் மூலம் தேடியறிதல் முகாமைத்துவ கருமங்களில் நெறிப்படுத்தலைக் குறித்து நிற்கின்றது.
   d) சந்தைப்படுத்தல் கலவையில் விலை என்ற கலவையில் கழிவுகள், கொடுப்பனவுகள், கடன் நிபந்தனைகள் என்பன அடங்குகின்றன. (02 புள்ளிகள்)
3. அ) காசோலையில் புறக்குறிப்பிடல் என்பதனால் கருதப்படுவது யாது?
ஆ) இலத்திரனியல் பணம் தொடர்பான சேவைகளில் காணப்படும் வரையறைகள் இரண்டு தருக.
(02 புள்ளிகள்)
4. அ) தொடர்பாடல் முறையொன்றை தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
ஆ) வான்வழிப் போக்குவரத்தின் அனுகூலங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
(மொத்தம் 08 புள்ளிகள்)

## பகுதி 11- கணக்கீடு

**(இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக)**

**வினா இல 05**

1. அ) வணிகக் கொடுக்கல் வாங்கல் என்பதனால் கருதப்படுவது யாது?
   ஆ) சொத்தொன்றின் பண்புகள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)
2. அ) வணிகமொன்றின் உரிமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
   ஆ) அமீர் வணிகத்தின் 2017 ஆம் வருடத்திற்கான தகவல்கள் சில வருமாறு

| | |
|---|---|
| மூலதனம் (2017.01.01 இல்) | 385000 |
| நிதியாண்டுச் செலவுகள் | 130000 |
| நிதியாண்டு வருமானங்கள் | 250000 |

   யூன் 30 ஆந் திகதி உரிமையாளரால் இடப்பட்ட மூலதனம் ரூ 40000 ஆகும். டிசம்பர் 31 ஆந் திகதி உரிமையாளரின் உரிமையைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)
3. பிரகாஷ் என்பவர் 01.01.2018 இல் பாடசாலை உபகரணங்களைவ விற்பனை செய்வதற்கான வணிகமொன்றை ஆரம்பித்தார் அன்றைய தினம் நிகழ்ந்த சில கொடுக்கல், வாங்கல்கள் வருமாறு:-

| | | |
|---|---|---|
| A. | பிரகாஷ் வணிகத்தில் காசாக ஈடுபடுத்திய மூலதனம் | ரூ 100000 |
| B. | காசுக்கு வாங்கிய தளபாட உபகரணங்கள் | ரூ 40000 |
| C. | வங்கியிடமிருந்து பெற்றகடன் | ரூ 30000 |
| D. | கடனுக்கு கொள்வனவு செய்த பாடசாலை உபகரணங்கள் | ரூ 15000 |

   அ) மேற்குறித்த ஒவ்வொரு கொடுக்கல், வாங்கல்களும் பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தை எழுதிக் காட்டுக.
   சொத்துக்கள் = உரிமை + பொறுப்பு (02 புள்ளிகள்)
   ஆ) மேற்படி கொடுக்கல், வாங்கல்களுக்கான இரட்டைப்பதிவினைத் தருக. (02 புள்ளிகள்)
4. திரு. பானுஷன் என்பவர் 01.01.2017 இல் வியாபார நிறுவனமொன்றை ஆரம்பித்தார். அவரின் வணிகத்தில் 31.12.2017 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதி வருமாறு:-

| | | வரவு ரூ | செலவு ரூ |
|---|---|---|---|
| | கொள்வனவுகள் | 50000 | |
| A | விற்பனைகள் | | 75000 |
| | தளபாட உபகரணங்கள் | 40000 | |
| B | பற்றுக்கள் | 9000 | |
| | சம்பளமும். கூலியும் | 10000 | |
| C | வங்கிக் கடன் | | 30000 |
| | கட்டிட வாடகை | 8000 | |
| | மின்சாரம் | 8000 | |
| | வங்கிக்கடன் வட்டி | 3000 | |
| D | காசுமீதி | 64800 | |
| | மூலதனம் | | 22000 |
| | தொங்கல் கணக்கு | 2200 | |
| | | 195000 | 195000 |

   மேலே தரப்பட்ட பரீட்சை மீதியை தயாரித்த பின்னர் கணக்கீட்டுத் தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டன.
   1) ரூ 10000 க்கு கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருள் பட்டியலொன்று கணக்குகளில் முழுமையாக விடுபட்டிருந்தது.
   2) தொலைபேசிக் கட்டணமாக ரூ 2200 காசேட்டில் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தது.
   ❖ வேண்டப்படுவது:-
   அ) மேலுள்ள பரீட்சை மீதியில் A,B,C,D என்னும் எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ளவை ஒவ்வொன்றும் உரித்தாகும் கணக்கு வகைகளைக் குறிப்பிடுக.
   ஆ) மேற்குறிப்பிட்ட தவறுகளை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக.
   (04 புள்ளிகள்) (மொத்தம் 12 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

**வினா இல 06**

1. அ) மூல ஆவணங்களின் பயன்கள் இரண்டு தருக.
   ஆ) கணினி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டின் அனுகூலங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

2. அ) பின்வரும் கொடுக்கல், வாங்கல்களுக்கான இரட்டைப்பதிவுகளைத் தருக.
   ஆ) 1) விற்பனை மூலம் பெற்ற காசோலை ரூ15000 அன்றைய தினமே வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.
   2) கவிதா என்ற கடன்கொடுத்தோருக்கு வணிகத்தினால் வழங்கப்பட்ட ரூ 20000 பெறுமதியான காசோலை மறுக்கப்பட்டமை பற்றி வங்கியால் அறிவிக்கப்படல்
   (02 புள்ளிகள்)

3. அ) கயல்விழி வணிகத்தின் சில்லறைக்காசு வசக்கட்டுத் தொகை ரூ 2000 ஆகும். கிடைக்கப்பெற்ற முற்பணக் காசின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சில்லறைக் காசுக் கொடுப்பனவுகள் வருமாறு:-

| | |
|---|---|
| எழுதுகருவி | ரூ 300 |
| சுத்திகரிப்புச் செலவுகள் | ரூ 400 |
| உபசரனைச் செலவுகள் | ரூ 500 |
| போக்குவரத்துச் செலவுகள் | ரூ 450 |

   மேற் குறிப்பிட்ட விபரங்களுக்கமைய பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.
   1) சில்லறைக் காசுக் கட்டுநிதி (வசக்கட்டு) மீள்நிரப்பல்
   2) மொத்த காசுக் கட்டுநிதி/ வசக்கட்டு (02 புள்ளிகள்)

   அ) 2017.01.20 அன்று ரூ 200000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்று வரையறுக்கப்பட்ட குமரன் கம்பனியிடமிருந்து நிறுவனப் பயன்பாட்டிற்கென கொள்வனவு செய்யப்பட்டது.
   ❖ வேண்டப்படுவது:-
   மேற்கூறிய கொடுக்கல் வாங்கலை பதிவு செய்வதற்கான மூல ஏட்டினைக் குறிப்பிட்டு, அதனை அவ்வேட்டில் பதிந்து காட்டுக. (02 புள்ளிகள்)

4. 30.06.2017 இல் இருந்தவாறு ஹரினி வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதி ரூ 20000 ஆகும். ஆனால் வங்கியில் இருந்து கிடைக்கப்பெற்ற வங்கிக் கூற்று மீதியானது வங்கிக் கணக்கு மீதியுடன் இணங்கவில்லை. பின்னர் வித்தியாசத்திற்கான காரணங்களாகப் பின்வருவன கண்டுபிடிக்கப்பட்டன.
   1) வங்கியால் நிலையியல் கட்டளைக்கிணங்க செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம் ரூ 8000 வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.
   2) வைப்புச் செய்தும் யூன் மாதத்தில் வசூலிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூ 5000 ஆகும்.
   3) வழங்கப்பட்டபோதும் யூன் மாதத்தில் கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூ 4000 ஆகும்.
   ❖ வேண்டப்படுவது:-
   a) 30.06.2017 இல் உள்ளவாறான வணிகத்தின் வங்கிக்கணக்கு மீதியை செம்மையாக்குக.
   b) 30.06.2017 இல் உள்ளவாறான வங்கிக்கணக்கிணக்கக் கூற்றைத் தயார் செய்க.
   (04 புள்ளிகள்)(மொத்தம் 12 புள்ளிகள்)

---

**வினா இல 07**

1. அ) விற்பனைக் கிரயத்தைக் கணிப்பிடும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய உருப்படிகள் எவை?
   ஆ) அறவிடமுடியாக் கடனுக்குரிய இரட்டைப்பதிவினைத் தருக. (02 புள்ளிகள்)
2. 2017 செப்ரெம்பர் மாதத்திற்கான வணிகமொன்றினால் தயாரிக்கப்பட்ட கொள்வனவு நாளேடும், விற்பனை நாளேடும் கீழே தரப்படுகின்றது.

கொள்வனவு நாளேடு

| திகதி | பட்டியல் இல | விபரம் | மொத்த தொகை | பே. ப |
|---|---|---|---|---|
| 09.09.2017 | 010 | அறிவழகன் | 5200 | |
| 20.09.2017 | 315 | அன்பழகன் | 3200 | |

விற்பனை நாளேடு

| திகதி | பட்டியல் இல | விபரம் | மொத்த தொகை | பே. ப |
|---|---|---|---|---|
| 15.09.2017 | 416 | கமலா | 7200 | |
| 25.09.2017 | 495 | விமலா | 4200 | |

மேற்குறித்த தகவலுக்கமைய 30.09.2017 மாதத்தில் கொள்வனவு நாளேட்டையும், விற்பனை நாளேட்டையும் பூர்த்தி செய்து காட்டுக.

(02 புள்ளிகள்)

3. வர்ஷினி வணிகத்தின் 31.12.2017 இல் உள்ளவாறான பரீட்சைமீதி கீழ்வருமாறு:-

| விபரம் | வரவு ரு | செலவு ரு |
|---|---|---|
| மூலதனம் | | 275000 |
| கொள்வனவு | 87500 | |
| ஆரம்ப இருப்பு (01.01.2017) | 2500 | |
| உட்சுமை கூலி | 2000 | |
| விற்பனை | | 160000 |
| கடன்பட்டோர் | 55000 | |
| கடன்கொடுத்தோர் | | 22000 |
| 10% வங்கிக்கடன் | | 50000 |
| காணிகட்டிடம் (கிரயத்தில்) | 200000 | |
| இயந்திரங்கள் (கிரயத்தில்) | 75000 | |
| கொடுத்தகழிவு | 3000 | |
| பெற்ற கழிவு | | 7500 |
| நிர்வாகச் சம்பளம் | 16000 | |
| விளம்பரம் | 10500 | |
| வங்கிக்கடன் வட்டி | 3000 | |
| காப்புறுதி | 7000 | |
| இறையும், வரியும் | 3000 | |
| வங்கியிலுள்ள காசு | 25000 | |
| கையிலுள்ள காசு | 25000 | |
| | 514500 | 514500 |

**மேலதிக தகவல்கள்:-**

- 31.12.2017 .இல் இருப்புக்கள் ரு 5000
- காணிகட்டிடம், இயந்திரங்களுக்கு நேர்கோட்டு முறையில் ஆண்டுக்கு 10% பெறுமானத் தேய்விடப்படுதல் வேண்டும்.
- அறவிடமுடியாக் கடனாக ரூபா 5000 பதிவழிக்கப்படல் வேண்டும்.
- செலுத்த வேண்டிய இறையும், வரியும் ரு 1000

**வேண்டப்படுவது:-**

1) 31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்டக் கூற்று (04 புள்ளிகள்)
2) 31.12.2017 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)